IntSym 2019
9th International Symposium

# புகையிலைச்செய்கைத் தடையும் எதிர்காலப்போக்கும்: யாழ்குடாநாட்டின் பருத்தித்துறை பிரதேச செயலகப்பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**P. Saranya[276] & B. Vaishnavan[277]**

Correspondence: Saranyasaru124@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய உலகில் மனிதனுடைய தேவைகளை நிறைவு செய்வதற்கு பலதுறைகள் காணப்படுகின்ற போதிலும் மனித தேவைகளை நிறைவேற்றுவதில் விவசாயமானது முக்கியமாக காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தினை பொறுத்த வரையில் விவசாயம் பாரம்பரியமான ஒரு முறையாகக் காணப்படுகின்றதுடன் பொருளாதாரம் ஈட்டித்தரும் ஒரு துறையாகக் காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்ட புகையிலை உற்பத்தி பொருட்களுக்கான கேள்வி தென்பகுதிகளில் உயர்வாகக் காணப்படுகின்றமை உற்பத்தியை அதிகரிக்க வழிவகுக்கின்றது. வடமாராட்சியை பொறுத்த வரையில் புகையிலைச்செய்கையானது தரமானதாகவும் கற்ற விவசாயிகளை கொண்டதாகவும் இவர்கள் முழுநேர விவசாயிகளாகவும் 38% மானவர்களும், பகுதிநேர விவசாயிகளாக 13% மானவர்களும் காணப்படுகின்றனர். இங்கு புகையிலைச்செய்கையானது சிறுபோகச்செய்கையாக 2018 இல் மேற்கொள்ளப்பட்டது. இப்பிரதேச மக்களினுடைய ஜீவனோபாயத் தொழிலாக விவசாயம் காணப்படுகின்றது. குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் புகையிலை மேற்கொள்ளப்படும் பகுதிகள் படமாக்கப்பட்டதுடன் மேலும் புகையிலைச்செய்கை தடை செய்வதற்கான காரணங்கள், தடைசெய்வதால் விவசாயிகள் எதிர்நோக்கும் சவால்கள் அதற்கான மாற்றுவழிகளையும் பிரேரணைகளையும் முன்வைத்தல் இவ்வாய்வின் நோக்கமாகக் காணப்படுகின்றது. இவ்வாய்வானது முதலாம் நிலைத்தரவு, இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கங்களின் அடிப்படையில் விபரணரீதியாக பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு முடிவானது பெற்றுக்கொள்ளப்பட்டது. புவியியல் தகவல் ஒழுங்கு முறையை பயன்படுத்தி புகையிலைச்செய்கை மேற்கொள்ளப்படும் பகுதிகள் கிராமசேவகர் பிரிவில் அடையாளப்படுத்தப்பட்டது. இதனடிப்படையில் முடிவுகள் முன்வைக்கப்பட்டது. ஆய்வுப்பிரதேசத்தில் பௌதீக, மானிட ரீதியான விடயங்கள் புகையிலைச்செய்கை மேற்கொள்வதற்கு சாதகமானதாக அமைந்துள்ள போதிலும் நாட்டின் வளர்ச்சி, கொள்கைகள், திட்டமிடல்கள் காரணமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் காரணமாக எதிர்காலத்தில் விவசாய சமூகம் எதிர்நோக்கும் பிரச்சனையானது சமூக, பொருளாதார ரீதியில் அவர்களை பின்தங்கிய நிலைக்கு இட்டுச்செல்வதாக அமைந்துள்ளது. இப்பணப்பயிரானது தடை செய்யும் நிலையில் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் வாழ்க்கைத்தரமும் குறைவடையும். புகையிலைச்செய்கை தடையினை 90% மான விவசாயிகள் ஏற்றுக்கொள்ளாத தன்மையில் 80% மானவர்கள் மாற்றுப்பயிருக்கு மாறாத நிலையும் காணப்படுகின்றது. ஏனெனில் புகையிலையானது அவர்களுக்கு பணப்பயிராகக் காணப்படுகின்றது. இவ்வாறான பிரச்சனைகளை குறைப்பதற்காக சிறந்த மாற்றுப்பயிர்களை தெரிவு செய்து கொள்வதன் ஊடாக விவசாயம் சார்ந்த, ஆய்வுப்பிரதேச மக்கள் மட்டுமின்றி அனைத்து விவசாய மக்களுக்கும் பயனடையக் கூடிய வகையில் அவர்களின் சமூக, பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்ள முடியும்.

**பிரதான சொற்கள்:** பயிர்ச்செய்கை, புகையிலை, ஜீவனோபாயம், பருத்தித்துறை, மாற்றுப் பயிர்கள்

## 1. அறிமுகம்

வடமராட்சிப் பகுதியானது விவசாயத்திற்கு மிகவும் பிரபல்யமான ஓர் பகுதியாக இருப்பதுடன் அப்பகுதி மக்களின் ஜீவனோபாயத் தொழிலாகவும் காணப்படுவதால் விவசாயம் முக்கிய தொனிப்பொருளாக உள்ளது. விவசாய அபிவிருத்தியானது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு அத்தியவசியமான ஒன்றாக காணப்படுகின்றது(Mahaliyanaarchchi,2003).

[276] Department of Geography, University of Jaffna, Sri Lanka.
[277] Department of Geography, University of Jaffna, Sri Lanka.

விவசாயம் தொடர்பான பிரச்சனைகள், அச்சுறுத்தலான நிலைமைகளில் அப்பகுதி மக்களின் பொருளாதாரமானது பாதிப்படையும் நிலையையும் உருவாகின்றது.

ஆய்வுப்பிரதேசத்தின் முக்கிய பணப்பயிர்ச்செய்கை முறைகளாக வெங்காயம், புகையிலை, மிளகாய் காணப்படுகின்றது. இது பெரும்போகம், சிறுபோகம் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது(Nisha et,al. 2003). இப்பயிர்செய்கை மூலம் கிடைக்கும் உற்பத்தியும் இலாபமும் விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதாக காணப்படுகின்றது. மேலும் இவ் புகையிலைச்செய்கையானது வேலைவாய்ப்பு, பல்வேறு வகையான வர்த்தகம்,பேன்ற எல்லா வகையிலும் பொருளாதார ரீதியில் பங்கு வகிக்கின்றது(Nisha et,al. 2003). 1980 களிலிருந்து இச்செய்கையானது விவசாயிகளின் முழுநேர வேலையாக காணப்பட்டது(Nisha et,al. 2003). இதனடிப்படையில் 1992 இல் கொழும்பில் 34% மான சிகெரட், 3% மான பீடி, மற்றும் 2% மான ஏனைய புகையிலை பயள்பாடுகள் காணப்பட்டது(Nisha et,al. 2003).

இன்றைய இலங்கை அரசின் கொள்கைகளில் ஒன்றான "போதையற்ற நாட்டினை உருவாக்குதல்" என்ற நோக்கத்தின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டு புகையிலைச் செய்கை உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு தடைவிதிக்கும் நோக்கத்தினை இலங்கை அரசு கொண்டுள்ளது. இதற்கான காரணமாக புகையிலைச்செய்கையால் ஏற்படும் பாதிப்புக்கள் முறையே உடல், ரீதியில் சுவாசநோய்கள், தோல்நோய்களும் உள ரீதியில் அதிகரித்த வெப்பத்தால் தலையிடி, தலைச்சுற்று, ஒவ்வாமை ஏற்படல் போன்றன ஏற்படுவதாலும் புகையிலைச்செய்கையால் வருடந்தேறும் 1800 மெற்றிக்தொன் மண் இழப்பு இலங்கையில் ஏற்படுகின்ற காரணத்தினாலும்(அன்ரனிேனாபேட், 2000) புகையிலை போதைப்பொருள் வர்த்தகத்தை சார்ந்து இருப்பதாலும் உடலில் புற்றுநோய் போன்ற பாரிய நோய்கள் ஏற்படுவதுமாகும். உலகளாவிய ரீதியில் 124 நாடுகளில் 9.4 மில்லியன் ஏக்கர் நிலப்பரப்பில் புகையிலை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதுடன் இது 9 மில்லியன் தொன் உற்பத்தியாகக் காணப்படுவதுடன் பொருளாதார ரீதியில் அதிகளவு இலாபம் தரும் துறையாகவும் காணப்படுகின்றது. எனினும் சூழலியல் ரீதியில் பாதிப்பான விளைவாக காடழிப்பு, மண்தரமிழப்பு, அதிகளவு உரப்பாவனை, சிகரெட் உற்பத்தி போன்றவற்றை ஏற்படுத்தும் என கூறினார்(லிஷா மில்லர்,1997). இவ்வாறான காரணங்கள் விவசாயிகள் புகையிலை தொடர்பாக பாரிய பிரச்சனைகளை எதிர்நோக்கும் சூழலை உருவாக்கியுள்ளது.

இலங்கையை பொறுத்த வரையில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, பொலநறுவை, குருணாகல், தம்புள்ள, புத்தளம் போன்ற சில பகுதிகளில் மட்டுமே புகையிலை பயிரிடப்படுகின்றது. இருப்பினும் வருமானம் கூடிய பயிராக காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தினை பொறுத்த வரையில் வடமராட்சி, தீவகம், வலிகாமம் போன்ற பகுதிகளில் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றது. இப்பயிர்ச் செய்கையில் விவசாயிகள் தம்மை முற்று முழுதாக இணைத்துக்கொள்ளும் தன்மை காணப்படுகின்றது. இலங்கையின் களுத்துறை, மாத்தறை, காலி, கொழும்பு, அம்பாந்தோட்டை, பொலநறுவை போன்ற பிரதேசங்களில் புகையிலை விற்பனை உயர்ச்சியினை அவதானிக்கலாம். இதனால் புகையிலை மீதான தடையானது விவசாயிகளை அதிகளவில் பாதிப்பதாக உள்ளது(suvanthini et al.,2013).

இலங்கையின் புகையிலைப்பயன்பாட்டில் வருடத்தில் புகைப்பிடிப்பவர்கள் 41%, மாதத்தில் புகைப்பிடிப்பவர்கள் 27.8%, நாள்தோறும் புகைப்பிடிப்பவர்கள் 21% எனக் காணப்படுவதுடன் கல்வியறிவற்றவர்களும் நடுத்தர குடும்பத்தினை சேர்ந்தவர்களும் அதிகளவில்

பழக்கமாகியுள்ளார்கள். ஆண்கள் 23%, பெண்கள் 0.9% மான பயன்பாட்டாளர்களாகவும் உள்ளனர். சமூத்தின் நன்மதிப்பு, உடல் ஆரோக்கியம் போன்றவற்றை கருத்தில் கொண்டு இதிலிருந்து விடுபடும் தன்மை காணப்படுகின்றது என கூறுகின்றார்(Perera,et al, 2005).

இலங்கையின் புகைத்தல் தன்மையானது மக்கள் மத்தியில் ஆபத்தான முறையில் காணப்படுகின்றது. முழுமையாகப் பார்க்கும் போது 23% என்ற அளவிலும் அதில் நகரப்பகுதியில் 29.5% மும் கிராமப்பகுதியில் 22% முமாகக் காணப்படுகின்றது. மேலும் ஆண்களில் 40% மான புகைப்பிடித்தலில் ஈடுபடுபவர்கள் 46 வயதுடையவர்கள். 30–39 வயதிற்குட்பட்டவர்களில் 58.9% மானவர்கள் ஆண்களாகவும் 1.2% மானவர்கள் பெண்களாகவும் உள்ளார்கள். 70 வயதிற்கு ட்பட்டவர்களில் 24.6% மும், பெண்கள் 0% மாகவும் உள்ளார்கள். இவ்வாறான நிலைமையானது குறைவான கல்வியறிவு, பழைய வயதுடையோர்கள் மற்றும் White collar occupation மத்தியில் உயர்வாகக் காணப்படுகின்றது(Prasad,et al, 2014).

இலங்கையின் புகைப்பிடித்தல் தொடர்பாக பார்க்கும் போது முற்று முழுதாக 18.3% மானவர்களும், நகரப்பகுதியில் 17.2%, 18.5% என்ற அளவில் புகைத்தல் தன்மை காணப்படுகின்றது. ஆண்களே அதிகளவில் ஈடுபடுகின்றார்கள். இதில் 20 வயதுடையவர்களில் 15.6% மானவர்களும், 29 வயதுடையவர்கள் 44.6% மானவர்களும் உயர்வான முறையில் இதில் பழக்கப்பட்டுள்ளார்கள். 87% மான அளவில் புகைப்பிடித்தல் நடைபெறுவதுடன் ஒரு நாளுக்கு 10ஐ விட குறைவான சிகெரட் பாவணை காணப்படுகின்றது. மேலும் இவ் புகைப்பிடித்தலைத் தூண்டக்கூடிய விடயங்களாக கல்வியறிவு குறைவான நிலை, வருமானம் குறைவு, நடுத்தர வயது போன்றன காணப்படுகின்றது(Prasad,et al, 2011).


புகையிலையானது பணப்பயிராக இருப்பதால் புகையிலைச்செய்கைக்கான தடையும் அதற்கான மாற்றுப் பயிர்களினை அறிமுகப்படுத்தல் என்பதும் சவாலான விடயமாக இருப்பதுடன் அது விவசாயிகளால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாகவும் காணப்படுகின்றது. வடமாகாணத்தின் விவசாயம் எனும் தலைப்பில் பணப்பயிரான புகையிலைச்செய்கை மற்றும் அது தடைசெய்யப்பட்டால் மேற்கொள்ளப்படக்கூடிய மாற்றுப்பயிர் வகைகளாக மருத்துவப்பயிர் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் பற்றியும் கூறப்பட்டுள்ளது(Mikunthan et al.,2012). புகையிலைச்செய்கையானது விவசாயிகளின் முற்றுமுழுதாக வருமானத்தை பெற்றுக்கொடுக்கும் பணப்பயிராகக் காணப்படுகின்றது. இருப்பினும் விவசாயிகளுக்கான மாற்றுப்பயிரினை அறிமுகப்படுத்துவது காலத்தின் கட்டாயமாக காணப்படுகின்ற போதும் இவ்வாய்வானது புகையிலைச்செய்கை தடையினால் ஆய்வுப்பிரதேசத்தில் விவசாயிகள் எவ்வாறான பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றார்கள் என்பதனை ஆராய்வதாக அமைந்துள்ளது. மேலும் எவ்வாறான மாற்றுப்பயிரினை அறிமுகம் செய்யும் தன்மையிலும் புகையிலைச்செய்கை ஊடாக மட்டும் பெற்றுக்கொள்ளும் மொத்த வருமானத்தினை ஏதாவது ஒரு மாற்றுப்பயிர் ஊடாகப்பெற்றுக்கொள்ள முடியாததுடன் ஒன்றிற்கு மேற்பட்ட மாற்றுப்பயிர்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்திலேயே மொத்த வருமானத்தினை பெற்றுக்கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது. இதனால் இவ்விவசாயிகள் மத்தியில் வருமானநிலைமை மட்டம் மாற்றமடைவது முக்கியமான பிரச்சனையாக உள்ளது. இப்பிரச்சனை தொடர்பாக பிரதேசசெயலாளர்கள், கமநல சேவைகள் நிலையம் மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் கொள்கைவகுப்பாளர்கள், திட்டமிடலாளர்கள் இவ்விடயத்தில் அக்கறை செலுத்துவதன் அவசியம் உணரப்பட்டதன் அடிப்படையில் குறித்த விடயம் முக்கியப்படுத்தப்பட்டது.

**நோக்கங்கள்**

- புகையிலைச்செய்கை மேற்கொள்ளப்படும் பகுதிகளை ஆய்வுப்பிரதேசத்தில் படமாக்குதல்.
- புகையிலைச்செய்கைத் தடைக்கான காரணங்களினை அடையாளப்படுத்துதல்.
- புகையிலைச்செய்கை தடையினால் ஆய்வுப்பிரதேசத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை கண்டறிதல்.
- பிரேரணைகள், பரிந்துரைகளினை முன்வைப்பதன் மூலமாக மாற்றுப்பயிர் தொடர்பான விழிப்புணர்வினை விவசாயிகள் மத்தியில் ஏற்படுத்துதல்.

**ஆய்வுப்பிரதேசம்**


ஆய்வுப்பிரதேசமான (உரு 1) வடமராட்சிப்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட சில கிராமசேவகர் பிரிவினை மையமாகக் கொண்டதுடன் 6.39 சதுரகிலோமீற்றர் பரப்பளவினைக் கொண்டு பருத்தித்துறை உதவி அரசாங்க பிரிவின் கீழ் அமைந்துள்ளது.இப்பகுதியில் சராசரியாக 5.5mm ற்கு குறைவான மழைவீழ்ச்சியும் சாரசரியாக $27^0$C-$29^0$C வரை வெப்பநிலையும் காணப்படுகின்றது. மொத்தப்பரப்பில் 47.5 ஹெக்டேயர் அளவில் புகையிலை மேற்கொள்ளப்படுகின்றது.




*உரு– 1 ஆய்வுப்பிரதேசம்*

**2. முறையியல்**

இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டு ஆய்விற்குட்படுத்தப்பட்டது. பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளானது கட்டமைப்பின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டது.




***உரு- 2 புகையிலை மேற்கொள்ளப்படும் பகுதிகள், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகளும் தீர்வுகளும் தொடர்பான பாய்ச்சல் வரைபடம்***


முதலாம் நிலைத்தரவுகளாக விவசாயிகள், கிராமசேவகர்கள், விவசாய போதனாசிரியர்களை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடல், நேர்காணல் மூலமாக ஆய்வுப்பிரதேசத்தின் புகையிலைச்செய்கை தடைக்கான காரணங்களும் இத்தடையினால் எதிர்காலத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார பிரச்சனைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் விவசாயிகளுக்கான மாற்றுப்பயிர்களும், மாற்றுப்பயிர் வகைகள் தொடர்பான விழிப்புணர்வும் வழங்கப்பட்டது. மேலும் இரண்டாம்நிலைத்தரவுகளாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் நிலப்பயன்பாட்டுப்படம்(2016), பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் கிராமசேவகர் படம்(2016) பெற்றுக்கொள்ளப்பட்டு அதனடிப்படையில் ஆய்வுப்பிரதேசத்தின் எல்லைப்படம் பெற்றுக்கொள்ளப்பட்டு புகையிலை மேற்கொள்ளப்படும் இடங்கள் பிரித்தெடுக்கப்பட்டதுடன் அப்பகுதிக்கு பொருத்தமான மாற்றுப்பயிர்களையும் அடையாளம் காண முடிந்தது.

## 3. முடிவுகள்

ஆய்வின் நோக்கத்திற்கேற்ப ஆய்வு முறையியலானது விபரண ரீதியானதாக அமைந்து காணப்படுகின்றதுடன் முடிவுகளும் விபரண ரீதியில் விபரிக்கப்படுகின்றது.

### 3.1 புகையிலை மேற்கொள்ளப்படும் பகுதிகளை படமாக்குதல்

புகையிலைச் செய்கை மேற்கொள்ளப்படும் பகுதிகளானது ஆய்வுப்பிரதேசத்தில் நிலப்பயன்பாட்டு படத்திலிருந்து புவியியல் தகவல் ஒழுங்குமுறையை பயன்படுத்தி உரு 3 இல் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஆய்வுப்பிரதேசம் ஒவ்வொன்றினதும் குடும்பங்களின் எண்ணிக்கை,சனத்தொகை, பரப்புக்கள் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது.




*உரு-3 புகையிலை மேற்கொள்ளப்படும் பகுதிகள்*

*அட்டவணை1- தெரிவு செய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவின் குடும்பங்கள் சனத்தொகை, பரப்பு(2018)*

| கிராம சேவகர் பிரிவு | குடும்பங்களின் எண்ணிக்கை | சனத்தொகை | பரப்பு (சதுரகிலோ மீற்றர்) |
|---|---|---|---|
| J/411 | 542 | 1807 | 1.28 |
| J/412 | 395 | 1310 | 1.25 |
| J/413 | 452 | 1334 | 1.58 |
| J/414 | 262 | 708 | 1.78 |
| J/415 | 156 | 485 | 0.50 |

*மூலம் -பருத்தித்துறை பிரதேசசெயலக புள்ளிவிபர அறிக்கை, 2018*

### 3.2 புகையிலைச்செய்கை தடைக்கான காரணங்கள்

அதிகளவு தரைக்கீழ் நீர் நுகரப்படும் ஓர் பயிர்ச்செய்கையாக புகையிலைச்செய்கை காணப்படுகின்றது.இதனால் தரைக்கீழ்நீர் தொடர்பான அச்சுறுத்தல்கள் ஏற்படுவதுடன் புகையிலைச்செய்கையினால் அதிகளவு மண்ணரிப்பு ஏற்படுகின்றது. மேலும் புகைதத்தல், வெற்றிலையுடன் மெல்லுதல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுவதால் வாய்ப்புற்று நோய் ஏற்படுகின்றது. அதன் அடிப்படையில் இலங்கையில் 41% மானவர்கள் வருடாந்தம் புகைப்பிடிப்பவர்களாகவும் 2.8% மானவர்கள் மாதாந்தம் புகைப்பிடிப்பவர்களாகவும் 27.8% மானவர்களாகவும் உள்ளார்கள் (Perera,et al, 2005). இதனால் இது ஒரு போதைப்பொருளாக அடையாளம் செய்யப்பட்டதன் விளைவால் சந்தைவாய்ப்பினை இழந்து செல்வதுடன் அதன் உற்பத்தியும் குறைந்துள்ளது. மேலும் புகையிலைப் பாவணையினால் அதிகளவு இறப்புக்கள் நடைபெற்றுவதால் அதனை கட்டுப்படுத்தும் முகமாக அரசு புகையிலைச் செய்கையை தடை செய்து போதையற்ற நாட்டினை உருவாக்குவதனை முன்னோக்காகக் கொண்டுள்ளது.

### 3.3 புகையிலைச்செய்கை தடையினால் ஆய்வுப்பிரதேசத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக கூறப்படும் விடயங்கள்

❖ பொருளாதார ரீதியான பிரச்சனைகள்

புகையிலையானது விவசாயிகளுக்கு ஒருபோக விளைச்சலின் போதே தொகையான வருமானத்தையும் இலாபத்தையும் வழங்கும் பணப்பயிராகக் காணப்படுகிறது. இதனால் பொருளாதார ரீதியில் நலனை பெற்றுக்கொள்ள முடிகின்றது. இந்நிலையில் இத் தடையானது விவசாயிகளின் பொருளாதாரத்தை பாதிப்பதாக உள்ளது.

❖ வாழ்க்கைத்தரம் குறைவடைதல்

பொருளாதார ரிதியிலான பின்னடைவானது விவசாயிகளின் நலனினை மற்றும் வாழ்க்கைத்தரத்தினை பாதிப்பதாகவும் உள்ளதுடன் விவசாயிகள் பொதுவில் வருமானம் குறைந்தவர்களாக உள்ளதால் இப் பணப்பயிரே பெற்றுக்கொண்ட கடன்களை மீள்நிரப்புவதற்கும் நிம்மதியான வாழ்கையினை வாழ்வதற்கும் உதவுகின்றது. இத்தடையானது விவசாயிகளின் வாழ்கைத்தரத்தை முற்றிலும் மாற்றியமைப்பதாக உள்ளது.

❖ மாற்றுப் பயிருக்கு மற்றும் தன்மையினை விரும்பாமை

புகையிலையானது ஆய்வுப்பிரதேச விவசாயிகளின் மரபுரீதியான பணப்பயிராக உள்ளதுடன் பழக்கமடைந்த பயிராகவும் காணப்படுகின்றது இதனால் இலகுவில் வேறு பயிர்களுக்கு மாற்றமடைய முடியாத தன்மை காணப்படுகிறதுடன் மாற்றுப்பயிர்கள் போதுமான வருமானத்தை பெற்றுக்கொடுக்கக் கூடியதாக உள்ளது என உறுதியளிக்கமுடியாத தன்மை காணப்படுகின்றது. இவ்வாறான காரணங்களால் தற்போது விவசாயிகள் குழப்பமடைந்துள்ளார்கள்.

❖ உடனடியான விளைச்சலினை பெற்றுக்கொள்ள முடியாமை.

மாற்றுப்பயிர்களானது உடனடியான விளைச்சலினை வழங்காத தன்மை காணப்படுகின்றது. கற்றாளை செய்கையினை எடுத்துக்கொண்டால் ஒரு வருடத்தின் பின்னரே முழுமையான பலனினை வழங்கும். இதனால் விவசாயிகளின் பொருளாதாரமானது பாதிப்படைகின்றது. மிளகாய்ச்செய்கையானது சரியான விளைச்சலினை வழங்காத தன்மையும் பராமரிப்புச்செலவு உயர்வானதாகவும் உள்ளது. இதனால் இம் மாற்றுப் பயிர்களினை அதிகளவில் விவசாயிகள் விரும்பாததன்மை காணப்படுகிறது.

❖ உடனடியான சந்தைவாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியாமை.

புகையிலைச்செய்கையின் உற்பத்தியின் சந்தைப்படுத்தலானது தென்னிலங்கையர்களால் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுவதால் உடனடியான சந்வைாய்ப்புக்கள் கிடைக்கின்றது. இதனால் விவசாயிகள் இலாபமடையும் தன்மை காணப்படுகின்றது. ஏனைய மாற்றுப்பயிர்களின் சந்தைவாய்ப்பினை பொறுத்த வரையில் கற்றாளையானது அலங்காரப்பொருட்கள்

உற்பத்திக்காக மட்டும் பயன்படுத்தப்படுவதால் கொள்வனவு குறைவடைகின்றது. இதனால் உற்பத்தி அதிகரித்து கேள்வி நிரம்பல் பிரச்சனை தோற்றம் பெறுகின்றது.

பொதுவாக நோக்கும் போது இப்பிரச்சனைக்கு காரணம் என கூறப்படுவது அரசியல் காரணமாகும். வடபகுதிமக்கள் தமிழர்களாக உள்ளதால் அவர்களின் பொருளாதார உயர்விற்கு காரணமாக புகையிலைச் செய்கை காணப்படுதால் அதன் உற்பத்தியினை தடைசெய்வதன் காரணமாக அவர்களை வருமானத்தில் குறைந்தவர்களாக மாற்றி பொருளாதார ரீதியில் தாழ்த்துவதாக உள்ளது மக்களால் உணரப்பட்டுள்ளது. இதனால் புகையிலைச்செய்கைக்கான கடன் கொடுப்பனவுகள், ஊக்குவிப்புக்கள் தடைசெய்யப்பட்டுள்ளதும் விவசாயிகளுக்கு பெரும் தடையாக காணப்படுகின்றது.இவ்வாறாக இதன் பாதிப்புக்கள் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3.4 பிரச்சனைக்கான தீர்வுகளும் பரிந்துரைகளும்

- வெங்காயம், கற்றாளை, இஞ்சி, மிளகாய், போன்றன பயிர்களை மாற்றுப்பயிராக பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற தீர்வினை முன்வைக்கின்றார்கள்.
- மாற்றுப்பயிரை அறிமுகப்படுத்தும் போது அப்பகுதி விவசாயிகளின் வருமானத்தை பாதிக்காத வகையில் அதனை ஊக்குவித்தல். உதாரணமாக மிளகாய்ச்செய்கையினை பார்க்கும் போது புலோலி கமநல அமைப்பினால் 40 ஏக்கருக்கான விதையினங்கள், உற்பத்திக்கான பாதிசெலவுகள் விவசாயிகளுக்கு வழங்கும் போதிலும் விசாயிகள் அதனை மேற்கொள்ள முன்வராநிலைமை காணப்படுகின்றது. காரணம் மிளகாய்ச்செய்கை உற்பத்தி, பராமரிப்புச்செலவு கூடியதுடன் சந்தைவாய்ப்பு குறைவானது. வெங்காயச்செய்கை பாரம்பரியமாக பின்பற்றிக்கொள்ளும் ஒரு பயிர்ச்செய்கையாக ஆய்வுப்பிரதேசத்தில் மேற்கொள்வதால் மேலும் இதனை ஊக்கப்படுத்துவதற்காக 2.5 மில்லியன் செலவில் குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் 5 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு 50kg வெங்காயக்குழிழினை இலவசமான முறையில் கொடுத்து சிறுபோக விளைச்சிலினை விளைவிப்பற்கான செலவினையும் கமநலசேவை அமைப்புக்கள் ஏற்றுக்கொண்டுஇச் செய்கையானது மேற்கொள்ளப்படுகின்றது.
- அரசகொள்கைகளின் அடிப்படையில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பெரியவெங்காய இறுக்குமதியினை நீக்கி சிறியவெங்காயத்தினை நாட்டில் தன்நிறைவடையச் செய்வதுடன் சிறியவெங்காயத்திற்கான சந்தைவாய்ப்புக்களை விவசாயிகளுக்குப் பெற்றுக்கொடுத்தல்.
- இடைத்தரகர்கள் முறையிலான சந்தைவாய்ப்பிற்கான சந்தர்ப்பத்தினை வழங்காமை. நேரடியாக உற்பத்தியாளர்கள் விற்பனை செய்யும் நிலையில் இலாபத்தினை பெற்றுக்கொள்ளுதல்.
- புகையிலைச்செய்கையின் தடைக்கான காரணங்கள் மற்றும் மாற்றுப்பயிர்கள் தொடர்பாக விவசாயிகளுக்கு சரியான முறையில் விளக்கங்களை வழங்கி விழிப்புணர்வுகளை ஏற்படுத்ததுதல்.
- நிலப்பொருத்தப்பாட்டின்அடிப்படையில் (Land Sutability) ஆய்வுப்பிரதேசத்திற்கான பொருத்தமான பயிரினையும் உச்சபயனைத் தரும் பயிரினை தெரிவு செய்தல்.
- மாற்றுப்பயிரின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் புதிய தொழில்நுட்பமுறையாக “Modeling farm” ற்கு விவசாயிகளை தெரிவு செய்து எல்லா வகையான பயிர்ச்செய்கையினையும் மேற்கொண்டு பிரதேசத்திற்கு பொருத்தமான பயிரினை தெரிவுசெய்தலும் விவசாயிகளை புதிய பயிர்ச்செய்கைக்கு மாற்றுதலும் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.
- மாற்றுப்பயிர்களாக விவசாய மூலிகைப்பயிர்களை பயிரிடுதல்.

எதிர்காலத்தில் புகையிலைச்செய்கையின் தடையினை எதிர்கொள்ளக் கூடிய வகையில் தற்போது கமல சேவைகள் திணைக்களம், பிரதேச செயலகம், ஏனைய அமைப்புக்கள் இதில் ஈடுபட்டு வருவதுடன் அது தொடர்பான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு மாற்றுவழிகளும் திட்டங்களும் ஏற்படுத்தப்படுகின்றது.

## 4. முடிவுரை

ஆய்வுப்பிரதேசத்தில் புகையிலை மேற்கொள்ளப்படும் இடங்கள் அடையாளம் செய்யப்பட்டதன் அடிப்படையில் அப்பிரதேசத்திற்கு பொருத்தமான மாற்றுப்பயிர்களாக கற்றாலை, வெங்காயம், மியகாய், இஞ்சி,மருத்துவப்பயிர்களபோன்றன காணப்படுகின்றது.இருப்பினும் பெறப்பட்ட முடிவானது விவசாயிகளின் மனநிலையில் மாற்றுப்பயிர்களை விரும்பாமையாகும். கிராமசேவகர், விவசாய போதனாசிரியர் கருத்தில் புகையிலைச்செய்கை தடையினை விவசாயிகள் விரும்பாத தன்மையோடு மாற்றுப்பயிர்களின் பயிரீட்டில் விருப்பமற்ற நிலையையும் வெளிப்படுத்துகின்றார்கள் என்பதாகும். இருப்பினும் எதிர்காலத்தில் புகையிலைச்செய்கையின் தடையினை எதிர்கொள்ளக் கூடிய வகையில் தற்போது கமல சேவைகள் திணைக்களம், பிரதேச செயலகம், ஏனைய அமைப்புக்கள் இதில் ஈடுபட்டு வருவதுடன் அதற்கான மாற்றுவழிகளையும் திட்டங்களையும் கூறுகின்றன. அதனடிப்படையில் விவசாய பொறுப்பான அமைப்புக்களால் இன்று பல்வேறு மாற்றுப்பயிர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எல்லாவிதமான மாற்றுப்பயிர்களும் விவசாயிகளுக்கு போதுமான வருமானத்தை பெற்றுத்தராது என்ற உறுதியினை விவசாயிகள் திடமாகக் கூறுவதுடன் விவசாயிகள் மத்தியில் சமூக, பொருளாதார ரீதியில் பின்னடைவு ஏற்படுவதாகவும் எண்ணுகின்றார்கள். புகையிலைச்செய்கை தடைக்கான காரணங்கள்தொடர்பான வாக்குவாதம் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.எவ்வாறாக இருப்பினும் விவசாயிகளின் பொருளாதாரத்தை ஈட்டித்தரும் பணப்பயிர்களுக்குத் தடை விதிக்கும் சந்தர்ப்பத்தில்விவசாயிகளின் வருமானத்திலும், வாழ்க்கைத்தரத்திலும் மனநிறைவினை ஏற்படுத்தும் வகையிலும் அரசின் திட்டங்களும் கொள்கைளும் அதன் செயற்பாடுகளும் அமைந்திருத்தல் வேண்டும்.

**உசாத்துணை**


- Perera, B.,Fonseka,P.,Ekanayake,R.,& Lewala,E.(2005). Smoking in adults in SriLanka: *Asia pacific of Journal of public Health* 17(1), 40-45.
- Prasad, K., Kremlin, W., Jayaweera, G., M., & Amila, R. (2011). Prevalence and correlates of tobacco smoking in Sri Lanka: *Asia pacific journal of public health* 23(6) 861-869.
- Prasad, k., Chaturanga, R., Amila R., Nalika K., & Rezvi. (2014). Prevalence, patterns and correlates of alcohol consumption and its' association with tobacco smoking among Sri Lankan adults: a cross – sectional study: *BMC public health* 14 (1), 612.
- Suvanthini,S,.Mikunthan,G., & Shyama.,T. (2013). Potential of withania somnifera dunal cultivation as a medicinal crop in jaffna district. *American- Eurasian Journal Agriculture and Environment Science*13(3), 357-361.
- Nisha,A., Maduwanthi, O., The Economics of the tobacco in Sri Lanka: *The World Bank, Washington.D.C*
- அன்ரனினோபேட்,S.(2000). காலநிலையியல். சேமமடு பதிப்பகம், சென்னை.
- லிஷா மில்லர்.(1997). புகையிலை உற்பத்தியினால் ஏற்படும் சாதக, பாதக விளைவு.
- மாகாண குறித்தெடுக்கப்பட்ட அபிவிருத்தி. (2018). பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்.
- பருத்தித்துறை பிரதேசசெயலக புள்ளிவிபர அறிக்கை, (2018), பருத்தித்துறை.
- கிராமசேவகர் பதிவேடு, பருத்தித்துறை கிராமசேவகர், (2018), பருத்தித்துறை.